வருடாந்திர பட்டமளிப்பு விழா
**ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி**

15 மார்ச் 2014

# "உதயமாகிறது புதிய பொலிமை படைத்த பாரதம்"

முனைவர் ஆ. சிவதாணு பிள்ளை

கல்லூரியின் தலைவர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களே, கல்லூரி முதல்வர் முனைவர் ரஞ்சித் அவர்களே, ஆசிரியப் பெருமக்கள் மற்றும் கல்லூரியின் பணியாளர்களே, சிறப்பு விருந்தினர்களே, பட்டதாரிகள் மற்றும் மாணவ மாணவிகளே, பெற்றோர்களே, நண்பர்களே,

உங்கள் எல்லோருக்கும் என் வணக்கங்கள்.

நண்பர்களே தொழிலதிபர் திரு. அனந்தராமகிருஷ்ணன் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 1963ம் ஆண்டு ஆரம்பித்த இக்கல்லூரியில் PUC படித்த இரண்டு மாணவர்கள் என்னுடைய கல்லூரி தோழர்களாக தியாகராசர் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார்கள். அப்போது இந்த கல்லூரியின் சிறப்பைப் பற்றி அவர்கள் பலதடவை கூறக் கேட்டிருக்கிறேன். இந்த பரமகல்யாணி கல்லூரியின் நினைவு என் மனதில் ஆழமாக பதிந்து விட்டது. முனைவர் ரஞ்சித் அவர்களின் மின்னஞ்சல் கிடைத்தவுடன், இந்த கல்லூரிக்கு வரவேண்டும், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. முதல்வர் முனைவர் ரஞ்சித் அவர்களின் ஆர்வமும் தொடர் முயற்சியும் தான் இந்த வாய்ப்பை எனக்கு அளித்தது.

மாணவ மாணவிகளே, உங்களிடம் "**உதயமாகிறது புதிய பொலிமை படைத்த பாரதம்**" என்ற தலைப்பில் பேச இருக்கிறேன்.

**<u>நாட்டின் பெருமை</u>**

தனி மனிதனின் பெருமையும், புகழும் அவனுடைய அறிவினாலும், பொருளாலும், வ□மையாலும் அமைவது போல ஒரு நாட்டின் பெருமையும், சிறப்பும் அந்நாட்டு மக்களின் அறிவுத்திறம், பொருள் மேம்பாடு, படை வலிமை இவற்றால் உறுதி செய்யப்படுகிறது.

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற் கிவ் வைந்து.**

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்த நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டு அளவிடலாம். தொழில்நுட்ப வளர்ச்சி, அந்த நாட்டின் அறிவியல் வள□ணினை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ‘‘தேவையே கண்டுபிடிப்பின் முன்னோடி‘‘ என்பதற்கேற்ப நமது முன்னோர்கள் தங்களது தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ள புதுப்புது அறிவியல் யுக்திகளை தங்களது அன்றாட வாழ்வில் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இவ்வாறு அறிவியல் யுக்திகள் செயலாக்கம் செய்யப்படும்போது வாழ்வின் சிரமங்களை□ குறைத்து மனித வாழ்வினை அறிவியல் எளிமையாக்கியது.

வரலாற்று ஏடுகளைப் நாம் புரட்டிப் பார்த்தால், இந்த உலகத்தில் நாகரிகம் தழைத்தோங்கி சுபிட்சம் நிறைந்திருந்த ஒரு சில நாடுகளில் இந்தியாவும் முதன்மையாக □ருகிதை அ□வோ□ □.மு. **2500**ஆ□ வருட□ணிலேயே □வசாய□, மண்பாண்டத்தொழில், கருவிகள், ஆபரணங்கள் தயாரிப்பு மற்றும் உலோகக் கலவை விக்கிரகங்களை உருவாக்குவது தொடர்பான திறன்களில் இந்தியா மேம்பட்டிருகிதது என்பதற்கு சிந்து சமவெ□ நாக□கம், மொஹஞ்ஜ–தாரோ மற்றும் ஹரப்பா இடிபாடுகளும் சாட்சி கூறுகின்றன.

நமது நாகரிகத்தின் அபாரமான சாதனைகளைக் கருத்திற்கொண்டு பார்த்தால், கடந்த மில்லினியத்திலேயே, நமது மேம்பட்ட சமூகமாக இருந்தது என்ற கருத்து வலு□படு□றது.

ஆனால் காலப்போக்கில் பல்வேறு அந்நிய படையெடுப்புகளின் தாக்கத்ணினாலும், தொழில் புரட்சியில் பங்கு கொள்ளாமை, மக்கள் தொகைப் பெருக்கம், மற்றும்

இரண்டாவது உலகப் போருக்குப் பின் நிலவிய புவி சார்ந்த அரசியல் நிகழ்வுகளாலும் இந்தியா தனித்து நின்ற காரணத்தினாலும், ஒரு காலத்தில் கொழித்துக் கொண்டிருந்த இந்திய தேசம் நலிவடைந்து மிகவும் பின் நிலைக்குத் தள்ளப்பட்டது.

விடுதலைப் போராட்ட இயக்கம், அரசியல் பொது வாழ்க்கை, இசை, க□தை, இலக்கியம் மற்றும் அறிவியல் துறைகளில் உன்னதத் தலைவர்களை உருவாக்கித் தகிதது. மன□–குறிக்கோள் சங்கமத்தில் வெளிக்கிளம்பிய தேச பக்தியும் தியாகமும் விடுதலைப் போராட்ட இயக்கத்தின் உந்து சக்தியாகத் திகழ்ந்தன. குறிப்பாக சொல்லவேண்டுமானால் இந்த பகுதியிலிருந்து பாரதியார், வாஞ்சி நாதன், கட்டபொம்மன் போன்ற எழுச்சி மிக்க வீரர்கள் இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடினர். வாழ்க்கையின் ஒவ்வொரு தளத்திலும், அன்னியர்களை விஞ்சி, முத்திரைப் பதிக்க வேண்டும் என்ற வேட்கை பல இந்திய இதயங்களில் ஜுவாலை□ட்டது. சானி□க□ துடி□கு□ □கித வேக□ பல □கிளிப□களை த□த□ த□ □ ணிறமையை வெ□ □படு□னி□காட்ட வை□தது.

## முன்னேற்றப் பாதையின் தடைக் கற்கள்

வள□கித நாடுகள் இரண்டாம் நிலை தொழில் நுட்பங்களை மட்டுமே பிற வளரும் நாடுகளுக்கு அளித்து வருவதால், வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையே தொழில் நுட்ப இடைவெளி தொடர்ந்து காணப்படுகிறது. இதனால் இந்தியா வளர்ந்து வரும் நாடு என்ற நிலைக்கு ஆக்கப்பட்டது. இந்த நெரு□கடியை சமாளிக்க தற்போது நமக்குத் தேவை **முன்னேற்ற தொலைநோக்கு.** இதன் மூலம் நாம் நமது ஆராய்ச்சி கூடங்கள், கல்விச்சாலைகள் மற்று தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து நமது நாட்டிற்குத் தேவையான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பக்க பலத்தை அளிக்க முடியும். மேலும் கல்விக்கூடங்கள், தொழிற்சாலைகள், ஆராய்ச்சிகூடங்கள் கூட்டாக செயல்பட்டால், அதன் மூலமாக தொழில் நுட்ப உற்பத்தி திறன் அதிகரித்து, தரமான பொருட்களைப் பிறநாடுகளுக்கு அ□ □கு□ □லை□கு வழிவகுக்கும். இதனால் நமது வளம் பெருகும்.

***புதிய பாரதம் என்பது என்ன?***

இந்தியாவின் பழம் பெரும் சிறப்பை திரும்பப்பெறவும் மேலும் உலக அரங்கில் இந்தியாவை மிகச்சிறந்த மற்றும் வல்லரசாக மாற்ற இளைய சமுதாயத்தினராலேயே முடியும். நம் நாடு மிகச் சிறந்த நாடாக இருப்பதற்கான தகுதிகள் யாவை?

1. நாட்டின் ஒவ்வொரு தகுதி பெற்ற மாணவனுக்கு, சமுதாய மற்றும் பொருளாதார நிலையைக் கொண்டு கல்வி மறுக்கப்படாமல் இருத்தல் (A Nation where education with value system is not denied to any meritorious candidates because of societal or economic discrimination.)
2. திறமை வாய்ந்த அறிவாளிகள், விஞ்ஞானிகள், மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கக்கூடிய நாடாக இருக்கவேண்டும். (A Nation which is the best destination for the most talented scholars, scientists, and investors.)
3. நாட்டின் விவசாயம், தொழில்துறை மற்றும் Services துறைகள் ஒன்றுடன் ஒன்று இணக்கமாக வேலை செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை பெருக்கவேண்டும் (A Nation where agriculture, industry and service sector work together in symphony to boost the economy.)
4. வறுமை, மற்றும் கல்லாமை முற்றிலுமாக இல்லாத நாடாகவும் மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் இல்லாத நாடாக இருக்கவேண்டும் (A Nation where poverty has been totally eradicated, illiteracy removed and crimes against women and children are absent and none in the society feels alienated.)
5. வளமான, ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் ஒரு நிலையான வளர்ச்சிப்பாதையில் செல்லும் நாடாக இருக்கவேண்டும். (A Nation that is prosperous, healthy, secure, peaceful and happy and continues with a sustainable growth path.)

***புதிய பாரத உருவாக்கம்***

இந்தியாவின் நாகரீக பாரம்பரிய துணை கொண்டு, அறிவுத்திறமையும், விடாமுயற்சியும் நிறைந்த ஆக்க சக்தி படைத்த 58 கோடி இந்திய இளைய சமுதாயம், இந்தியாவின் இயற்கை வளங்களை திறமையாக பயன்படுத்தி ***வளர்ச்சியடைந்த இந்தியா*** என்ற தொலைநோக்கின் மூலம் நாம் புதிய பாரதத்தை உருவாக்க முடியும். இன்றைய அறிவாற்றல் யுகம் (Knowledge age) இந்தியாவிற்கு மிகவும் சாதகமான நிலையில் உள்ளது. இதன் மூலம் கல்வி, நல வாழ்வு, விவசாயம், தொழில்துறை, மற்றும் மென்பொருள் போன்ற துறைகளில் மறுமலர்ச்சியை உருவாக்க முடியும். இந்த மறுமலர்ச்சி, கலைத்திறமை, அதிக வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தித் திறன், தொழில்முனைவோருக்கு ஊக்கம், ஒருங்கிணைக்கப்பட்ட, வெளிப்படையான சமுதாயம், கிராமங்களில் செழிப்பு, நோயில்லா வாழ்வு இவைகளுக்கு வழிவகுக்கும்.

செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் மேன்மையிலும், அறிவாற்றல் மிகுந்த மனிதவள சக்தியிலும், இந்தியா ஆதாரத் திறன்களைப் பெற்றிருப்பதால், அறிவாற்றல் யுகத்தில் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் மீண்டும் நிலை நாட்ட வேண்டும். புதிதுபுதிதாக வரும் தொழில்நுட்பங்களை கச்சிதமாக பயன்படுத்திக் இந்தியாவை ஒரு பொலிமை படைத்த நாடாக உருவாக்குவது சாத்தியமாகும்.

***50 ஆண்டுகளுக்கு பின்னால்***

இப்பொழுது இன்னும் 50 ஆண்டுகளில் நம் வாழ்வு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்வோமா?

புத்தாண்டுப் பிறப்பின் மகிழ்ச்சியை கொண்டாடுவதற்காக டிசம்பர் 31ம் தேதி நடந்த விழாவில் கலந்து கொண்ட களைப்பில் நீங்கள் அசந்து தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நேரம் காலை மணி ஆறு. அறையின் சுவர் திரை ஒளி பெற்று, சமீபத்தில் வாங்கிய டெலிவிஷன் தன்னிச்சையாக இயங்கி உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துப் பாடலை ஒலியும் ஒளியுமாக தெரிவித்து உங்களை எழுப்பி,

"நீங்கள் அலுவலகத்தில் மிகவும் அவசரமாக நேரடியாக தேவைப்படுகிறீர்கள்" என்று கூறுகிறது. வேண்டாவெறுப்பாக படுக்கையை விட்டு எழுந்து குளியலறையை நோக்கி செல்கிறீர்கள். அங்கே முகம் கழுவும் போது, கண்ணாடியிலும் சுவற்றிலும் மறைந்திருக்கும் நூற்றுக்கணக்கான DNA மற்றும் புரோட்டின் உணர்வீகள் (Sensors) உங்கள் உடலில் இருந்து மூச்சு மற்றும் திரவங்கள் மூலமாக வெளியேறும் மூலக்கூறுகளை (Molecules) ஆராய்ந்து உங்களுக்கு உடல்நலக்குறைவு எதுவும் இல்லை என்று உறுதிசெய்கின்றன. குளியலறையை விட்டு வெளியே வரும் நீங்கள் சில வயர்களை தன் தலையில் சுற்றிக்கொள்கிறீர்கள். இது உங்கள் வீட்டை Telepathy மூலம் கட்டுபாடுகளை பிறப்பிக்க உதவுகிறது. வீட்டின் வெப்பநிலையை சமன்படுத்தவும், தன்னுடைய ரோபோ சமையல்காரரிடம் தன்னுடய காலை உணவுக்கான கட்டளைகளை தன் மனதின் மூலமாகவே இடுவதற்கும் உதவுகிறது. அலுவலகம் செல்வதற்காக தன்னுடைய மின்காந்தக் காரை தயார் நிலையில் இருக்க ஆணை இடுகிறீர்கள். பிறகு உங்களுடைய contact lensல் உள்ள இணையம் மூலம் அன்றைய நாளிதழில் உள்ள முக்கிய செய்திகளை, ரோபோ கொடுத்த காபியை அருந்தியபடியே படித்து முடிக்கிறீர்கள். பிறகு தனக்காக வாசலில் காத்திருக்கும் தானியங்கி மின்காந்த காரில் ஏறி அமர்ந்தபடி அலுவலகம் செல்கிறீர்கள். காரில் பின் சீட்டில் இருந்த படியே நீங்கள் உங்கள் நண்பரை தொடர்பு கொள்கிறீர்கள். அவர் உடனே Laser holography உருவுடன் உங்கள் பக்கத்திலேயே உட்கார்ந்து உரையாடுகிறார். கார் அலுவலகத்தை தன்னியங்கியாக சென்று அடைகிறது. காரின் கதவு தானே திறக்கிறது. நீங்கள் உங்கள் Virtual நண்பரோடு பேசிக்கொண்டே செல்கிறீர்கள். அலுவலகத்தை அடைந்து அன்றாட வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள். செவ்வாய் கிரகத்திலிருந்து ஹீலியம்-3 மின்சக்கதி பொருள் உடனடியாக கொண்டு வருவதற்கு உங்களுக்கு கட்டளை வருகிறது. அடுத்த நாள் காலையில் புறப்படுகிற விண்வெளி ஓடத்தில் செவ்வாய் கிரகம் செல்ல பதிவு செய்கிறீர்கள். புறப்பட தேவையானவற்றை தயார் செய்யும் படி உங்கள் ரோபோவிற்கு wireless மூலம் கட்டளை இடுகிறீர்கள். அடுத்த நாள் செவ்வாய் கிரகத்திற்கு பயணம் மேற்கொள்கிறீர்கள். போகும் வழியில் உள்ள சந்திரன் பக்கத்தில் உள்ள விண்வெளிக் குடியிருப்பில் (Space Colony) வாழும் நண்பரின் இல்லத்திற்கு செல்கிறீர்கள். பின் செவ்வாய் கிரகத்திற்கான உங்கள் பயணம் தொடர்கிறது. வாழ்வில் இதுபோன்ற நாம் எதிர்பார்க்க முடியாத பல மாற்றங்கள் வர இருக்கின்றன. இது தான் நம் அறிவியல் யுகத்தின் வாழ்வு.

நீங்கள் எந்த துறையினராக இருந்தாலும், இந்த மாற்றத்திற்கேற்ப எல்லோரும் அறிவியல் துறையில் சிறந்த வல்லுநராகவே இருப்பீர்கள். இந்த புதிய உலகத்தில், இந்தியா வளர்ந்த, செழிப்பான, அறிவும் ஆற்றலும் கொண்டு உலகில் முதல் நாடாக இருக்கும் என்பதில் எனக்கு சிறிதளவும் ஐயமில்லை. நம் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சி எங்கும் நிறைந்திருக்கும், வள்ளுவர் கூறியபடி. இந்த உதயமாகின்ற புதிய இந்தியாவைக் காண்பதில் உங்கள் எல்லோருக்கும் பங்கு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாகவி பாரதியின் வார்த்தைகளை நினைவு கூறி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

அன்னை பரம கல்யாணியின் அருளால், உங்களின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடையந்து, நீங்கள் எல்லோரும் சிறப்புடன் வாழ என் மனமார்ந்த வாழ்த்துகள்.

நன்றி, வணக்கம்.